20470190

# TAMIL

*Maximum Marks: 80*
*Time Allotted: Three Hours*
*Reading Time: Additional Fifteen Minutes*

20470190

## Instructions to Candidates

1. You are allowed an **additional fifteen minutes** for **only** reading the question paper.
2. You must **NOT** start writing during reading time.
3. This question paper has **12 printed pages**.
4. It is divided into **two sections: Section A and Section B.**
5. It has **fifteen questions** in all.
6. **Section A** has **three questions.** All questions are compulsory.
7. While attempting **Multiple Choice Questions** in Section A, you are required to **write only ONE option as the answer**.
8. **Section B** has **twelve questions**. You are required to attempt **any four** questions in this section on **any three** out of the four prescribed textbooks.
9. The intended marks for questions are given in brackets [ ].

20470190
20470190

## Instruction to Supervising Examiner

1. Kindly read **aloud** the Instructions given above to all the candidates present in the examination hall.

SEAL


*© Copyright reserved.*

## SECTION A

## LANGUAGE - 40 MARKS

**Question 1** **[15]**

**Write a composition in approximately 400 words in Tamil on *any one* of the topics given below.**

கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 400 வார்த்தைகளில் ஒரு கட்டுரை தமிழில் எழுதுக.

(i) நமது பூமியின் காலநிலை மாற்றம், அதன் விளைவுகள் மற்றும் அதற்கான தீர்வுகள் இவற்றை விவரித்து ஒரு கட்டுரை வரைக.

(ii) நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(iii) ஒரு வரலாற்று தளத்திற்குச் சென்று வந்த மறக்க முடியாத அனுபவத்தைப் பற்றி விவரித்து எழுதுக.

(iv) "செயற்கை நுண்ணறிவு (AI) என்பது விரைவில் கவிஞர்களுக்குப் பதிலாக செயல்படும்" - இதனை ஏற்றோ அல்லது எதிர்த்தோ ஒரு கட்டுரை வரைக.

(v) "இந்தியப் பன்முகத் தன்மையின் (Diversity) பலம் மற்றும் சவால்கள்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(vi) கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு மூலச் சிறுகதை எழுதுக.

  (a) "...... அன்றுதான் நான் என் வாழ்வில் ஒரு முக்கியமான, மதிப்புமிக்க பாடத்தைக் கற்றுக் கொண்டேன்" என முடியும் ஒரு சிறுகதை எழுதுக.

  (b) "பல வருடங்களுக்குப் பிறகு நான் என் தம்பியை நேற்று விமான நிலையத்தில் சந்தித்த போது ......" எனத் துவங்கும் ஒரு சிறுகதை எழுதுக.

**Question 2**

**Read the passage given below carefully and answer the questions that follow, using your own words in Tamil.**

**பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துணர்ந்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.**

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் ஔவை மொழியும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கணியன்பூங்குன்றன் மொழியும், தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புக்கும் சான்றுகளாம். பழங்காலத்தில், தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி முந்நீர் வழக்கம் எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மேற்கே கிரீசு, உரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையிலும் கடல்வழி வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பழந்தமிழர், கிரேக்கரையும் உரோமானியரையும் யவனர் என அழைத்தனர்.

பழங்காலத்திலேயே தமிழகத்தில் பலவகையான கப்பல்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு பெரிய கப்பலும் மதில் சூழ்ந்த கோட்டை போலத் தோன்றுமாம். அஃதாவது, நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள். அதன் நடுவில் தனியாக மதிலோடு கூடிய மருதநில அரசனது கோட்டை. அக்கோட்டையின் தோற்றமானது, நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாகப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது. கடலில் செல்லும் பெரிய கப்பல் நாவாய் எனப்படும்.

தமிழகத்தில் நடைபெற்றுவந்த வாணிகத்தின் பயனாகப் பல துறைமுகங்கள் கடற்கரைப் பட்டினங்களாகச் சிறந்து விளங்கின. அவற்றுள் காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை ஆகியவை குறிப்பிடத்தக்கன.

0610/2020/07/2020

முசிறி, சேர மன்னற்குரிய துறைமுகம். அங்கு யவனர்கள், பொன்னைச் சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றார்கள். இச்செய்தியை, அகநானூறு தெரிவிக்கிறது. பாண்டிய நாட்டின் வளம் பெருக்கியது கொற்கைத் துறைமுகம். ஏற்றுமதிப் பொருள்களில் முத்தே இங்கு முதலிடம் பெற்றது. மதுரைக்காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தினைச் சிறப்பிக்கின்றன.

கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்களைப் பட்டினம், பாக்கம் என்றழைப்பர். அவ்வூர்களில் பெரும்பாலும் வணிகர்களே வாழ்ந்து வந்தார்கள். சோழநாட்டின் துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் (பூம்புகார்) சுங்கச்சாலையும் கலங்கரை விளக்கமும் இருந்தன. இங்குக் கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும் நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் குவிந்து கிடந்தன.

தமிழகப் பொருட்கள் சீனத்தில் விற்கப்பட்டன. சீனத்துப் பட்டும் சருக்கரையும் தமிழகத்திற்கு இறக்குமதி ஆயின. கரும்பு, அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது. கடற்பயணம் பற்றிய கல்வியறிவு இந்நாளில் மக்களை எட்டியுள்ளது. எனவே, மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்னும் பாரதியின் கனவு இன்று நனவாகி உள்ளது.

கேள்விகள்:

(i) கப்பலின் தோற்றத்தைப் புறநானூறு எவ்வாறு உவமிக்கின்றது? [3]

(ii) அக்காலத்தில் பூம்புகார் எவ்வாறு விளங்கியது? [3]

(iii) முசிறி, கொற்கை துறைமுகங்களைப் பற்றி குறிப்பு வரைக. [3]

(iv) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(a) கடலில் செல்லும் பெரிய கப்பல் __________ எனப்பட்டது. [1]

(1) தெப்பம்

(2) நாவாய்

(3) ஓடம்

(4) பரிசில்

(b) கடல் பயணத்தை முந்நீர் வழக்கமெனக் குறிப்பிடும் நூல் __________. [1]

(1) அகநானூறு

(2) புறநானூறு

(3) தொல்காப்பியம்

(4) திருக்குறள்

(c) பழந்தமிழர், கிரேக்கரையும் உரோமானியரையும் __________ என அழைத்தனர். [1]

(1) எகிப்தியர்

(2) அமெரிக்கர்

(3) சீனர்

(4) யவனர்

06/07/2024

(v) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(a) கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்்களைப் பட்டினம், ___________ என்றழைத்தனர். [1]

(1) பாக்கம்

(2) சேரி

(3) பேட்டை

(4) நகரம்

(b) யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது ___________ மொழி. [1]

(1) ஔவையார்

(2) கணியன்பூங்குன்றனார்

(3) கம்பர்

(4) கபிலர்

(c) அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து ___________ கொண்டுவந்து பயிரிடப்பட்டது. [1]

(1) கரும்பு

(2) நெல்

(3) வாழை

(4) மிளகு

**Question 3**

**(A) Do as directed.**

**கூறியபடி செய்க.**

(i) கொடுக்கப்பட்ட வாக்கியத்தைப் பிழை திருத்தி எழுதுக. [1]

காலையில் புலவர் வந்திருந்தபோது மன்னரின் விழிகள் சிவந்திருந்தது.

204701190

(ii) கொடுக்கப்பட்ட வாக்கியத்தைப் பிழை திருத்தி எழுதுக. [1]

நாளை காலை அவர்கள் மூவரும் கடற்கரைக்குச் செல்கின்றனர்.

(iii) பிழை நீக்கிய வாக்கியத்தை எடுத்து எழுதுக. [1]

(a) நீறின்றி அமையாது உளவு என்பது வள்ளுவம்.

(b) நீரின்றி அமையாது உலகு என்பது வள்ளுவம்.

(c) நீரின்ரி அமையாது உலகு எண்பது வள்ளுவம்.

(d) நீறின்றி அமையாது உளகு என்பது வல்லுவம்.

(iv) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. [1]

(a) குறவஞ்சி என்பது ஒருவகை நாடக இலக்கிய வடிவமாகும்.

(b) குரவஞ்சி என்பது ஒருவகை நாடக இளக்கிய வடிவமாகும்.

(c) குறவஞ்சி எண்பது ஒருவகை நாடக இழக்கிய வடிவமாகும்.

(d) குறவன்சி என்பது ஒறுவகை நாடக இளகிய வடிவமாகும்.

(v) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. [1]

(a) ஆள்கடலின் அமைதி மணதை உறங்க வைக்கும்.

(b) ஆழ்கடளின் அமைதி மனதை உரங்க வைக்கும்.

(c) ஆல்கடழின் அமைதி மனதை உரங்க வைக்கும்.

(d) ஆழ்கடலின் அமைதி மனதை உறங்க வைக்கும்.

2047010190

**(B) Use the idioms in the sentences as per the instructions given.**

மரபுச் சொற்களைக் கூறியுள்ளபடி பயன்படுத்துக.

(i) வாக்கியத்தில் அமைத்து எழுதுக

(a) அல்லும் பகலும் **[1]**

(b) தெள்ளத்தெளிய **[1]**

(ii) சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக: **[1]**

(a) எந்தக் கல்லூரியில் சேர்வது என்று தெரியாமல் கண்ணன் ____________ இருந்தான்.

(1) நகமும் சதையும் போல்

(2) சீரும் சிறப்புமாய்

(3) மதில்மேல் பூனை போல்

(4) கள்ளமின்றி

(b) வாங்கிய கடனை திருப்பித் தராமல் ராஜேஷ் கடன்காரனை இன்று நாளை என்று ____________. **[1]**

(1) தலை காட்டினான்

(2) அலைக்கழித்தான்

(3) போற்றிப் புகழ்ந்தான்

(4) தோள் கொடுத்தான்

(c) திரு.வி.க வின் மேடைப் பேச்சில் மூன்று தமிழும் ____________ ஓடியது. [1]

(1) கரைபுரண்டு

(2) சீரும் சிறப்புமாய்

(3) தொன்று தொட்டு

(4) ஐயமின்றி

## SECTION B
## LITERATURE - 40 MARKS

*Answer **four** questions from this section on **any three** out of the four prescribed textbooks.*

*பின் வரும் வினாக்களுள் ஏதேனும் **நான்கனுக்கு** உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள **மூன்று** பாடப் புத்தகங்களிலிருந்து விடையளி.*

## பொதுத் தமிழ் (PODHU TAMIL)

**Question 4**

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

(i) வினைத் திட்பம் என்பது யாது? [1]

(ii) வினைத் திட்பமுடையார் எய்தும் பயன் யாது? [2]

(iii) வினைத் திட்பமுடையாரின் இழிவு என்று கூறப்படுவது யாது? [2]

(iv) வினைத்திட்பத்தில் வள்ளுவர் கூறும் ஏதேனும் ஐந்து கருத்துகளை எழுதுக. [5]

2047019019

**Question 5** **[10]**

இராவணன் வருகையும், அதன்பின் நிகழ்ந்தனவுமாகிய செயல்களை அனுமன் உரைத்த பாங்கினை தொகுத்து எழுதுக.

**Question 6** **[10]**

மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாரா பாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

## கதைக் கோவை (KADHAI KOVAI)

**Question 7**

'சாம்பார் வாளியும் சட்னி வாளியும் கொண்டு நடந்தவன் "வழி, வழி" என்று கத்தியும் அங்கும் இங்கும் ஒதுங்க இடமில்லை.'

(i) உணவுக் கடைகளில் அந்தப் பக்க நாகரீகமாக ஆசிரியர் எதைக் குறிப்பிடுகிறார்? **[1]**

(ii) மேலத் தெரு மகராஜன் யாருக்கெல்லாம் ஓசிப்படி அளப்பார் ? **[2]**

(iii) அந்த உணவுக் கடையில் சட்னி, சாம்பார் எப்படி இருக்கும்? **[2]**

(iv) மாணிக்கமும் அவன் தகப்பனாரும் என்னென்ன சாப்பிட்டனர்? எவ்வளவு ஆயிற்று? என்னவென்று சொல்லி எவ்வளவு காசு கொடுத்தார்? **[5]**

**Question 8** **[10]**

மண் – இக்கதையினைச் 'சின்னத்தாயி' கூறுவதாய் மாற்றி எழுதுக.

**Question 9** **[10]**

மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து - இக்கதையின் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக.

## சினேகிதி (SINEKITHI)

**Question 10**

'வீட்டிற்குள் நுழைந்தபோது, "வாருங்கள்" என்று புன்முறுவலுடன் அழைத்துக் கொண்டே கதவைத் திறந்து விட்டாள் லலிதா. நான் பிரமித்து விட்டேன்! என் கண்களை நான் நம்பவில்லை.'

(i) லலிதா உடுத்தியிருந்த புடவையின் நினைவு வந்த போது துரை யாருடைய கவிதையை எண்ணிப் பார்த்ததாகக் கூறுகிறார்? **[1]**

(ii) 'பெண்களுக்குத்தான் எத்தனை கலை உணர்ச்சி பாருங்கள்!' என்றார் நாராயணசாமி. கலை என்பதன் பொருள் என்ன? ஏன் அப்படிக் கூறுகிறார்? **[2]**

(iii) "உடலின் தேவை இல்லாமல் உள்ளுணர்வால் மட்டிலும் மனிதர் வாழ முடியுமா?" என்று கேட்டவர் யார்? இதற்கு யார் என்ன பதில் கூறினார்? **[2]**

(iv) பிறந்த நாளன்று லலிதாவின் உடை மற்றும் அலங்காரம் எவ்வாறு வர்ணிக்கப் பட்டுள்ளது? விளக்குக. **[5]**

**Question 11** **[10]**

"உலகம் வாழத் துடிப்பவர்களுக்கு குறுக்கே நிற்கும்" என்று அகிலன் அடிக்கடி கூறினாலும் நாராயணசாமியை அதற்கு எதிர்மறையாகப் படைத்துள்ளார் என்பதை நிறுவுக.

**Question 12** **[10]**

துரை–லலிதா இவர்களின் முதல் சந்திப்பின் போது நடந்த உரையாடலைத் தொகுத்து எழுதுக.

2047019190

## யான் கண்ட இலங்கை (YON CANDA ELANGI)

**Question 13**

'காவிரியாற்றை வானுலகிலிருந்து காணப் போகிறோம் என்று மங்கையர்க்கரசியிடம் சொன்னேன். காவிரியாறு வரப்போகிறது என்ற எண்ணத்தால் என் மனம் எத்தனையோ கற்பனைகளைக் காணத் தொடங்கியது.'

(i) இலங்கைத் தமிழரின் சிறந்த சிற்றுண்டி எது? அதற்குச் சுவையூட்ட எதைக் கொடுக்கிறார்கள்? [1]

(ii) கொழும்புத் துறைமுகத்தைப் பற்றி ஏதேனும் இரு செய்திகளைக் கூறுக. [2]

(iii) புதுச்சேரி நகரம் விமானத்திலிருந்து பார்க்கும்போது எவ்வாறு காட்சி அளித்தது? [2]

(iv) விமானத்திலிருந்து காவிரியாற்றைப் பார்க்கும்போது மு.வ. வின் மனதில் தோன்றிய சிலப்பதிகார, மணிமேகலைக் காப்பியச் செய்திகள் யாவை? [5]

**Question 14** [10]

இலங்கை வாழ் மக்களின் உணவு, உடை, சமயம், அணிகலன், பழக்க வழக்கங்கள் பற்றி குறிப்பு எழுதுக.

**Question 15** [10]

தம்பளை என்னும் இடத்தில் அமைந்துள்ள குகைக்கோயிலைப் பற்றி விவரித்து எழுதுக.

SEAL
20470190
20470190
20470190